**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S.No.15/2023**

**வா.சா.1 - கண்ணன் 05.02.2025**

**குறுக்கு விசாரணை :-**

பிரதிவாதி எனது நண்பர் பால்ராஜ் மூலமாக பழக்கம். நான் மதுரை வண்டியூரில் வசித்து வருகிறன். பிரதிவாதி திருப்புவனம் அல்லிநகரில் வசித்து வருகிறார். நான் விவசாய வேலை மற்றும் கட்டிட ஒப்பந்ததாரராக வேலை பார்த்து வருகிறேன். மணிமாறன் என்பவர் எனது உடன்பிறந்த சகோதரர். மணிமாறன் வெளிநாட்டில் கட்டுமான வேலை பார்த்து வருகிறார். பிரதிவாதி எனது சகோதரர் மணிமாறனிடம் ரூ.2,00,000/- கடன் வாங்கி அதனை ஒரு வருடத்திற்குள் கட்டி முடித்த விபரம் எனக்கு தெரியும் என்றால் பிரதிவாதி எந்த தொகையும் கொடுக்கவில்லை. பிரதிவாதியின் உடன்பிறந்தவர்களை தெரியுமா என்றால் அவரது சகோதரியை எனக்கு தெரியும். பிரதிவாதியிடமிருந்து பணத்தை திரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரர் மணிமாறன் சகலவித நடவடிக்கை எடுக்க அதிகார ஆவணம் கொடுத்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 பொது அதிகார ஆவணத்தில் ஈடுபத்திரத்துக்கு செல்வைக்கும் சம்பந்தமாக எனக்காக தாங்கள் செய்யும் சகலவிதமான நடவடிக்கையையும் நானே நேரில் இருந்து செய்ததாக ஒப்புக்கொள்வதாகவும் இந்த பவர்மூலம் மேற்படி ஈடுபத்திரத்திற்கு எனக்காக தாங்கள் பணம் பெற்று செல்வைத்து கொடுப்பதற்கு மட்டும்தான் இந்த பவர் தங்களுக்கு வழங்கியுள்ளேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா ஈட்டுகடன் பத்திரம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க அதிகாரம் வழங்குவதாக வா.சா.ஆ.2ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சகலவித நடவடிக்கைகளும் எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

**மானாமதுரை.**